# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
## வளாகக் கல்வித் தேர்வுப்பிரிவு

---

முனைவர் த. தெய்வீகன்
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)

நாள்: 06.05.2021

**இணையவழித் தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பயிலும் முதுகலை மற்றும் ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டப் படிப்பு முதலாமாண்டு மாணவர்களுக்கான முதல் பருவத் தேர்வுகள் (திசம்பர் 2020) மற்றும் சிற்பக்கலைக்கூடம் சார்ந்த பட்டயம் / சான்றிதழ் பாடப்பிரிவுகளுக்கான தேர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ள கால அட்டவணையின்படி 10.05.2021 முதல் (அரசு விடுமுறை நாள்கள் தவிர்த்து) 18.05.2021 வரை நடைபெறவுள்ளன. இத்தேர்வுகள் அனைத்தும் இணையவழியிலேயே நடைபெறும். தேர்வுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துள்ள மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத வேண்டும்.

**இணையவழித் தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்**

I. தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் ஒவ்வொரு தேர்வு நாளன்றும் முற்பகல் 09.45 மணிக்குப் பல்கலைக்கழக இணையதளத்தில் (www.tamiluniversity.ac.in) வெளியிடப்படும். தேர்வுக்குரிய காலம் முற்பகல் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை மட்டுமே ஆகும்.

II. முதுகலை / ஒருங்கிணைந்த முதுகலை:

- முதுகலை மாணவர்கள் விடைத்தாள்களை வருடியாக்கம் (Scan) செய்து பிற்பகல் 2.00 மணிக்குள் regulartamilma@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அன்றே அனுப்பிவிட வேண்டும்.
- ஒருங்கிணைந்த முதுகலை மாணவர்கள் விடைத்தாள்களை வருடியாக்கம் (Scan) செய்து பிற்பகல் 2.00 மணிக்குள் integratedtamilma@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அன்றே அனுப்பிவிட வேண்டும்.

III. சிற்பத்துறை – சிற்பக்கலைப் பயிற்சிக் கூடம்:

- பட்டயம் மற்றும் சான்றிதழ் மாணவர்கள் விடைத்தாள்களை வருடியாக்கம் (Scan) செய்து பிற்பகல் 2.00 மணிக்குள் sculptureexams@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அன்றே அனுப்பிவிட வேண்டும்.

IV. தேர்வு இறுதி நாளன்று தாங்கள் எழுதிய அனைத்து விடைத்தாள்களையும் ஒரே உறையில் வைத்து விரைவுத் தபால்/கூரியர் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ),**
**வளாகக்கல்வித் தேர்வுப் பிரிவு,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்,**
**தஞ்சாவூர்-613 010**

V. மாற்றுத்திறனாளி (பார்வைக் குறைபாடுடைய) மாணவர்களுக்குத் தேர்வு நேரத்தில் கூடுதலாக ஒரு மணி நேரம் அனுமதிக்கப்படுகிறது (அவர்கள் உரிய சான்றிதழை இணைக்க வேண்டும்).

VI. விடைத்தாள்களை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நேரில் கொடுக்க விரும்புவோர் தேர்வு நாள்களில் பிற்பகல் 03.00மணிக்குள் வளாகக்கல்வித் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் அலுவலகத்தில் அளிக்கலாம் .

VII. விடைகள் எழுத **ஏ4 அளவுள்ள** கோடிடப்படாத தரமான வெள்ளைத் தாள்களைப் பயன்படுத்த வேண்டும். தாளின் இரண்டு பக்கங்களிலும் எழுதலாம். விடைத்தாள்களைப் பக்க எண்களிட்டு பக்கவாரியாக அடுக்கி மடிக்காமல் ஏ4 அளவுள்ள தரமான தனி உறையில் வைத்து அனுப்ப வேண்டும். அனுப்புநர் முகவரியில் தங்களின் பெயர், **சேர்க்கை எண்**, அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் கூடிய முழு முகவரி, அலைபேசி எண் ஆகியவற்றை தவறாது குறிப்பிட வேண்டும்.

## குறிப்பு

- **மாணவர்கள் தங்கள் விடைத்தாளின் முகப்புப் பக்கத்தில் பதிவெண் என்று குறிப்பிட வேண்டிய இடத்தில் தங்களது சேர்க்கை எண்ணைக் குறிப்பிடக் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.**
- **ஆயினும் தற்போது முதுகலை / ஒருங்கிணைந்த முதுகலைத் தேர்வு எழுதும் மாணவர்கள் அனைவரும் தங்களது சேர்க்கை எண்ணிற்கு முன்னால் பூஜ்யம் (0) என்ற எண்ணையும் இணைத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. (முதுகலை / ஒருங்கிணைந்த முதுகலைத் தேர்வு எழுதும் மாணவர்களின் சேர்க்கை எண்ணுடன் கூடிய பெயர் பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.)**
- **சிற்பத்துறை – சிற்பக்கலைப் பயிற்சிக்கூடம் பட்டயம் / சான்றிதழ் வகுப்பு மாணவர்கள் தங்களது சேர்க்கை எண்ணை மட்டும் எழுதினால் போதுமானது.**

VIII. விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் கீழ்ப் பகுதியில் மாணவர்கள் தங்கள் பதிவு எண்ணை எழுதிக் கையொப்பம் இட வேண்டும்.

IX. **விடைத்தாளின் முகப்பு பகுதியைப் பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து முதல் நாளே பதிவிறக்கம் செய்து கொண்டு, தேவைக்கேற்ப நகலெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாள் தேர்வு எழுதும்போதும் மேற்குறிப்பிட்ட முகப்புப்பக்கத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து ஒவ்வொரு விடைத்தாளிலும் முதல் பக்கமாக இணைக்க வேண்டும்.**

X. ஒவ்வொரு தேர்வினையும் 40 பக்கங்களுக்கு மிகாமல் எழுத வேண்டும்.

XI. மாணவர்கள் விடைத்தாள்களின் எந்தவொரு பக்கத்திலும் பெயர் மற்றும் சிறப்புக் குறியீடுகளை எழுதக் கூடாது.

**"எத்தகைய முறைகேடுகளிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர். முறைகேட்டில் ஈடுபட்டதாகப் பின்னர் தெரிய வந்தால் அம்மாணவர்கள் பல்கலைக்கழக விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கைக்கு உள்ளாவர்."**

06/05/24

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ)